# பொலிஸ் வெகுமதி நிதியம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பொலிஸ் வெகுமதி நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் கொள்கை

பொலிஸ் வெகுமதி நிதியத்தின் நிதிக் கூற்றுக்களானவை காசு அடிப்படை மற்றும் அட்டுறு அடிப்படை ஆகிய 02 முறைகளையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளன.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது நீதி மன்றத் தண்டப்பணமாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 2,882,520 பெறுமதியான மதிப்பிழந்த காசோலைகள் காசுக் கணக்கிற்குச் செலவு வைக்கப்படாது மதிப்பிழந்த காசோலைகள் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டு நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டுள்ளன.

(ஆ) மீளாய்வாண்டின் போது பேரேட்டுக் கணக்குகளிற்கு வரவு மற்றும் செலவு வைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட 28 நாட்குறிப்புக்களுக்காக பொறுப்பான நபர்கள் எவரினாலும் கையெழுத்திடப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 தொங்கல் கணக்கு

2003 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை ரூபா 48,929 தொகையான தொங்கல் கணக்கின் செலவு மீதி காணப்பட்டது. அந்த தொங்கல் கணக்கின் செலவு மீதி காணப்பட்டது. அந்த தொங்கல் கணக்கு மீதி தோன்றுவதற்கான காரணத்தினை இனங்கண்டு சரி செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) ரூபா 660,997 தொகையான பொறுப்புக்கள் 02 ஆண்டுகள் மற்றும் 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகத் தீர்த்து வைக்கப்படாதிருந்ததனால் எதிர் காலத்தில் அப்பொறுப்புக்களைத் தீர்த்து வைப்பதற்கான வாய்ப்பு ஐயத்திற்குரியவை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) பொலிஸ் அனுசரணை நிதியத்திற்கு வழங்கப்பட்டுள்ள ரூபா 2,000,000 தொகையான முற்பணங்களுக்காக 12 ஆண்டுகள் வரையான காலம் எடுத்திருந்த போதிலும் அதனைத் தீர்த்து வைக்காததன் காரணமாக அப் பணத்தின் அறவீடு ஐயத்திற்குரியவை என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) ரூபா 4,184,014 தொகையான 3 வகையான முற்பணங்கள் வழங்கப்பட்டு 11 ஆண்டுகள் கடந்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அது செலவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் சுற்று நிருபங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் சுற்றுநிருபங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை | விபரம் |
|---|---|
| **(அ) அரசாங்க நிதிப்பிரமாணம்** | |
| நி.பி 395 (ஏ) | சேகரிக்கப்படும் பணத்தினை வங்கியில் வைப்புச் செய்தல், காசோலையினை எழுதுதல், அல்லது காசேட்டினை பேணுதல் என்பவற்றில் எதுவித தொடர்பும் இல்லாத ஒருவரினாலே அல்லது உத்தியோகத்தர்களினாலே வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட |

| | |
|---|---|
| | வேண்டிய போதிலும் அவ்வாறு வெகுமதி நிதியம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

**(ஆ) சுற்றுநிரூப அறிவுறுத்தல்கள்**

| | |
|---|---|
| 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிரூபம் | 2011 ஆம் ஆண்டிற்காக பாதீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாடுகள் ரூபா 248,926,156 தொகையான மிகையினை விளைவித்திருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 413,505,403 ஆக இருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 164,579,247 தொகையான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டதுடன் அது பின்வருமாறு பகுப்பாய்வு செய்யப்பட்டது.

| | 2011 | 2010 | முன்னைய ஆண்டிற்கான நிதிசார் விளைவுகளுக்கான தாக்கம் சாதகம் (பாதகம்) |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| **வருமானம்** | | | |
| நீதி மன்ற தண்டப்பணமும் முதலீட்டு வருமானமும் | 818,302,753 | 850,892,579 | (32,589,826) |
| **செலவுகள்** | | | |
| வெகுமதி மற்றும் பொழுது போக்கு நடவடிக்கை | 564,658,750 | 437,246,226 | (127,412,524) |
| நிர்வாகச் செலவுகள் | 187,600 | 140,950 | (46,650) |
| ஏனைய செலவுகள் | 4,530,247 | - | (4,530,247) |
| நிதிசார் விளைவுகளில் வீழ்ச்சி | | | (164,579,247) |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

ரூபா 150 மில்லியனுக்கு அண்மித்த தொகை ஆண்டு முழுவதும் விளைவற்று வங்கி நடைமுறைக் கணக்கில் வைத்திருக்கப்பட்டதுடன் தேவைப்பாட்டினை சரியாக முன்னாய்வு செய்திருந்தால் மிகை நிதியினை 8% நிலையான வைப்புக்களில் முதலீடு செய்து ரூபா 12 மில்லியன் தொகையான வட்டி வருமானத்தினை உழைக்கக் கூடியதாக இருந்தது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) ஏடுகளைப் பேணல்

(இ) மாதாந்த கணக்குகளின் பொழிப்புக்களைத் தயாரித்தல்